# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 12 வியாழக்கிழமை 27.03.2025 கதிர் 163




# நாடு அநுரவோடு! மக்களோ கண்ணீரோடு!!



## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விசனம்

கொழும்பு, மார்ச் 27

"சுப நேரத்தில் நாட்டை அநுரவுக்கு வழங்கிவிட்டு மக்கள் மிகவும் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

"வருமானம் அதிகரிக்கப்படாமல் பொருட்களின் விலை அதிகரிக்கப்படுவதால் மக்கள் கஷ்டப்படுகின்றனர். மூன்று வேளை உணவு உண்பது சிரமமாகிப்போயுள்ள வேளையில், மக்களுக்கு அழுத்தம் கொடுப்பதில் இந்த அரசு சிறந்து விளங்குகின்றது." - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் மொனராகலை மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே சஜித் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

7➤



அத்துமீறி மீன்பிடித்த

## இந்திய மீனவர்கள் 11 பேர் சிக்கினர்!



யாழ்ப்பாணம், மார்ச் 27

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் 11 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

7➤

## சாமர சம்பத் தசநாயக்க எம்.பி. கைதாகி பிணையில் விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 27

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் இன்று கைதுசெய்யப்பட்ட புதியஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஊவா மாகாண முதலமைச்சராக அவர் பதவி வகித்த காலத்தில் இடம்பெற்ற 3 ஊழல் கொடுக்கல் - வாங்கல்கள்




தொடர்பில் இன்று காலை விசாரணை நடத்தப்பட்ட நிலையில் அவர் கைது செயயப்பட்டார். இரண்டு அரச வங்கிகளிடமிருந்து இரண்டரை மில்லியன் ரூபா பணத்தை ஊவா மாகாண சபைக்காகப் பெற்றுக்கொண்டு அதனை சாமர சம்பத் தசநாயக்க அறக்கட்டளை வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டமை இந்தக் குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும்.

மற்றுமொரு அரச வங்கியிடமிருந்து மாகாண சபைக்காக

7➤

## வடமராட்சியில் கேரள கஞ்சா மீட்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். வடமராட்சி, வல வெட்டித்துறை, பொலிகண்டிப் பகுதியில் இன்று காலை ஒரு தொகை கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

7➤


## மன்னாரைச் சேர்ந்த குடும்பஸ்தரைக் காணவில்லை

மன்னார், மார்ச் 27

மன்னார், பனங்கட்டு கொட்டு மேற்கு பகுதியைச் சேர்ந்த முருகேசு சசிக்குமார் என்ற 51 வயது குடும்பஸ்தர், கடந்த 23 ஆம் திகதி முதல் காணாமல்போயுள்ளளார் என்று அவரது மனைவி மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் கடந்த 23 ஆம் திகதி வவுனியா சென்ற நிலையில் இதுவரை வீடு திரும்பாத நிலையில் அவர் காணாமல்போயுள்ளார்

7➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# தனியார் பேருந்து - லொறி விபத்து பாடசாலை மாணவர்கள் உட்பட 15 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு,மார்ச் 27

தனியார் பேருந்தும் சிறிய லொறியும் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட சுமார் 15 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹொரணை நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்து, இங்கிரிய நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிய லொறி மீது மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்து ஹொரணை - இரத்தினபுரி வீதியில் இங்கிரிய மாவட்ட வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்களில் மாணவர்கள் உட்பட லொறி சாரதி மற்றும் உதவியாளரும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் இங்கிரிய மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், ஆபத்தான நிலையில் இருந்த லொறி உதவியாளர் உட்படபலபாடசாலைமாணவர்கள்சிலர் மேலதிக சிகிச்சைக்காக ஹொரணை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை இங்கிரிய பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# இலங்கையர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு!

கொழும்பு,மார்ச் 27

தென் கொரியாவின் தென் கிழக்கு பகுதியில் காட்டு தீ பரவி வரும் நிலையில் குறித்த பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு இலங்கைத் தொழிலாளர்களைக் கேட்டுக்கொள் வதாக கொரியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித் துள்ளது. தபோதைய சூழ்நிலையில் அங்குள்ள இலங்கையர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட்டதாக தகவல் எதுவும் பதிவாகவில்லை என தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும், ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால் தென் கொரியாவில் உள்ள இலங்கையர்கள் 2 735 2966, 2 735 2967 அல்லது 2 794 2968 என்ற தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளுமாறும் தென் கொரியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

தென் கொரியாவின் தென் கிழக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டு தீ பரவலினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளதுடன் தீப்பரவலில் சிக்குண்டு மேலும் 26 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தென் கிழக்கு பகுதியிலிருந்து இதுவரை 23,000க்கும் அதிகமானோர் தங்களது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொது போக்குவரத்து சேவைக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

பொது போக்குவரத்து சேவைக்கு இடையூறு விளைவிக்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு ஏற்படலாம் என்றும், அந்த சேவைகளை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது எனவும் போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி காலி - மாத்தறை பஸ் சாரதி ஒருவரை தாக்கிய சம்பவத்தை தொடர்ந்து அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அத்துடன் தாக்குதலை நடத்திய மற்றும் அதற்கு உறுதுணையாக இருந்த லொறி சாரதி மற்றும் முச்சக்கரவண்டி சாரதிக்கு எதிராக கடுமையாக சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# டெங்குவை கண்டறிய ட்ரோன்

கொழும்பு,மார்ச் 27

டெங்கு நுளம்பும் இனப்பெருக்கம் செய்யும் இடங்களை ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அடையாளம் காணும் நடவடிக்கை நுகேகொடையில், வியாழக்கிழமை ஆரம்பிக கப்பட்டது. சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவும் மேல் மாகாண சபையும் இணைந்து மூன்று நாட்களுக்கு இந்த திட்டத்தை செயல்படுத்துகின்றன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய மேல் மாகாண ஆளுநர் ஹனிஃப் யூசுப்டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை இந்த ஆண்டு குறிப்பிடத்தக்க அளவில் குறைந்து வருவதாகக் கூறினார்.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜெயசிங்க மற்றும் மேல் மாகாண சுகாதார செயலாளர் எல்.ஏ. கலுகாபு ஆராச்சி ஆகியோரும் கலந்து கொண்டனர்.(ஐ)

# வாக்காளருக்கான செலவு வரையறை வெளியானது




கொழும்பு,மார்ச் 27

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக ஒரு வேட்பாளர் ஒரு வாக்காளருக்கு அதிகபட்சமாக எவ்வளவு செலவு செய்யலாம் என்பதை குறிப்பிட்டு தேர்தல் ஆணைக்குழு வர்த்தமானி அறிவிப்பை, வியாழக்கிழமை வெளியிட்டது.


அதன்படி, ஒரு வேட்பாளர், வாக்காளர் ஒருவருக்காக 74 ரூபாய் முதல் 160 ரூபாய்க்கு இடைப்பட்ட தொகையை செலவழிக்கலாம்.

தேர்தல்கள் நடைபெற உள்ள 366 உள்ளூராட்சி மன்றங்களுக்கு இந்தத் தொகை தனித்தனியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்களின் போது லஞ்சம் அல்லது பரிசுகள் மூலம் வாக்குகளைப் பெறுவதைத் தடுக்க, ஆணைக்குழு தனதுக்கு உள்ள அதிகாரங்களுக்குள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதற்கிடையில், உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணி கடந்த 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்களிப்பு மே 6 ஆம் திகதி நடைபெறும். (ஐ)

# பவுசர் கவிழ்ந்ததில் சாரதி, உதவியாளர் பலி



கொழும்பு,மார்ச் 27

கலவான-மதுகம வீதியில் அம்பலமஹேன பகுதியில் புதன்கிழமை இரவு ரப்பர் லேடக்ஸ் பவுசர் கவிழ்ந்ததில் சாரதி மற்றும் உதவியாளர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கலவான பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் பால் லாரியின் ஓட்டுநராக இருந்த கல்னேவ ரம்புக்கன பகுதியைச் சேர்ந்த ஜனக பாதும் குமார ( வயது 27) மற்றும் சாரதியின் உதவியாளராக இருந்த புளத்சிங்கள பகுதியைச் சேர்ந்த பதுடிகே பிரியந்த (வயது 36) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புளத்சிங்கள பகுதியில் உள்ள ஒரு ரப்பர் தொழிற்சாலையின் ரப்பர் லேடெக்ஸ் பவுசர் விபத்தில் சிக்கியுள்ளது. இரத்தினபுரி பகுதியில் ரப்பர் லேடெக்ஸை சேகரித்து திரும்பிக் கொண்டிருந்தபோது பவுசர் விபத்துக்குள்ளானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தபால் மூல வாக்களிப்புக்கான திகதிகள் அறிவிப்பு!

கொழும்பு,மார்ச் 27

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதன்படி ஏப்ரல் மாதம் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த தினங்களில் தபால் மூலம் வாக்களிக்க முடியாத அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் தபால் மூலம் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்படும் எனவும் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.



# வர்த்தக நிலையங்களுக்கு 70 ஆயிரம் ரூபாய் தண்டம்

கொழும்பு,மார்ச் 27

மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற வகையில் உணவைக் கையாண்ட உணவக உரிமையாளர்கள் உட்பட ஐஸ்கிரீம் உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு எதிராக 70 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டு, எச்சரிக்கையையும் செய்யப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீன் ஆலோசனைக்கமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம். நௌசாத் தலைமையில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பல உணவகங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன் போது பலசரக்கு கடைகள், ஹோட்டல்கள், துரித உணவுக் கடைகள், ஐஸ்கிரீம் உற்பத்தி நிலையம் போன்றவற்றில் சுகாதார நடை முறைகளை பின்பற்றாத உரிமையாளர்களுக்கு புதன்கிழமைசம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஆஜர் படுத்திய போது அவ்வாறான வர்த்தகர்களுக்கு எதிராக தலா 25,000 , 15,000, 20,000, 10,000 ரூபா உள்ளடங்கலாக 70 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டது.

மேலும் ஹோட்டல், ஐஸ்கிரீம் உற்பத்தி நிலைய உரிமையாளர்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு வாரங்களுக்கு பிறகு மீண்டும் பரிசோதனை செய்யுமாறும் முன்னேற்றம் காணப்படாத விடத்து மூடுவதற்கான இறுதி உத்தரவு வழங்க நீதிவானினால் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# கொடிக்கம்பங்களை ஏப் 21ஆம் திகதிக்குள் அகற்ற வேண்டும்; ஐகோர்ட் உத்தரவு

பொது இடங்களில் உள்ள கொடிக்கம்பங்களை ஏப் 21ம் திகதிக்குள் அகற்ற வேண்டும்' என சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சி துறைக்கு சொந்தமான இடங்களில் அமைக்கப்பட்டு உள்ள அனைத்து அரசியல் கட்சிகள், இயக்கங்கள், சாதி மத ரீதியிலான அனைத்து கொடி கம்பங்களையும் 12 வாரங்களுக்குள் அகற்ற வேண்டும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஜனவரி 27ம் தேதி அன்று உத்தரவிட்டது.

மதுரை உயர்நீதிமன்ற உத்தரவின் படி தமிழகத்தில் தேசிய, மாநில, உள்ளாட்சி அமைப்பு ரோடுகளில் உள்ள தங்கள் கட்சி கொடி கம்பங்களை அகற்ற தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவுறுத்தி இருந்தார்.

இந்நிலையில், சென்னையை சேர்ந்த வழக்கறிஞர் ராகேஷ், 'ராயபுரத்தில் நடை பாதையில் அமைக்கப்பட்டுள்ள கட்சி கொடிக்கம்பத்தையும், கல்வெ ட்டையும் அகற்ற உத்தரவிட கோரி ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு இன்று (மார்ச் 27) விசாரணைக்கு வந்தபோது, கொடிக்கம்பங்கள் விவகாரத்தில் சென்னை ஐகோர்ட் முக்கிய உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. 'பொது இடங்களில் உள்ள கொடிக்கம்பங்களை ஏப் 21ம் தேதிக்குள் அகற்ற வேண்டும்.

தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை பகுதிகளில் ஏப்ரல் 21ம் தேதிக்குள் அகற்றவிட்டால், வழக்கு தொடரலாம்' என சென்னை ஐகோர்ட் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# இளையராஜாவுக்கு பாராட்டு விழா: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



லண்டனில் சிம்பொனி அரங்கேற்றிய இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு ஜூன் 2ம் திகதி பாராட்டு விழா நடத்தப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள முன்னணி இசையமைப்பாளர்களில் ஒருவராக இருப்பவர் இளையராஜா. இவர், 1,000க்கும் மேற்பட்ட திரைப்படங்களில், 15,000க்கும் அதிகமான பாடல்களுக்கு இசையமைத்துள்ளார். தனது வாழ்நாள் கனவான, சிம்பொனியை லண்டனில் உள்ள ஈவென்டிம் அப்போலோ அரங்கில் அண்மையில் அரங்கேற்றினார். மேலும், அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள் என பல்வேறு தரப்பினரும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் கூறி வருகின்றனர். சிம்பொனியை அரங்கேற்றிய முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்ற இளையராஜா, சென்னை திரும்பிய போது, தமிழக அரசின் சார்பில் அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று வரவேற்றார். தொடர்ந்து, முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து இளையராஜா நன்றி தெரிவித்தார். அப்போதே, அரசு சார்பில் பாராட்டு விழா நடத்தப்படும் என்று முதல்வர் கூறியிருந்தார்.

இந்த நிலையில், சட்டசபையில் அதற்கான அறிவிப்பை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார். இளையராஜா தனது பிறந்தநாளை கொண்டாடும் ஜூன் 2ம் தேதி பாராட்டு விழா தமிழக அரசால் நடத்தப்படும் என தெரிவித்துள்ளார்.



# சிறப்பான தேர்தல் நடைமுறை இந்தியாவை டிரம்ப் பாராட்டியது மகிழ்ச்சிக்குரிய விஷயம்: சசி தரூர்

இந்தியாவின் தேர்தல் நடைமுறைகளை உதாரணமாக எடுத்து கொண்டது, நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டிய ஒன்று என காங்கிரஸ் எம்.பி., சசி தரூர் தெரிவித்தார்.

அமெரிக்க தேர்தல் முறையை சீரமைப்பதற்கான நிர்வாக உத்தரவில், அதிபர் டிரம்ப் இந்தியாவை உதாரணம் காட்டி இருந்தார். இது குறித்து காங்கிரஸ் எம்.பி., சசி தரூர் கூறியதாவது: அமெரிக்காவில் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், அவர்கள் ஓட்டளிக்க வரும் போது குடியுரிமை பெற்றவர் என்பதற்கு சுய சான்று அளித்தால் போதும்.

ஆனால் இந்தியாவில், நம்மிடம் வாக்காளர் பட்டியல் உள்ளது. அடையாள அட்டை இருக்கிறது. ஓட்டளிக்கும் நபர் உண்மையில் நமது குடிமகன் தான் என்பதை நிரூபணம் செய்வதற்கு தேவையான நடைமுறைகள் அனைத்தும் உள்ளன. இந்த நடைமுறை 1952ம் ஆண்டு முதல் இருந்து வருகிறது. சிறப்பாகவும் செயல்படுகிறது.

இதற்கு உலகம் முழுவதும் நிறைய மரியாதை உள்ளது. இதனை அதிபர் டிரம்ப், அமெரிக்க மக்களிடம் உதாரணம் காட்டி இருக்கிறார். அவரது நாடு சரியாக இல்லை என்றும் அவர் கூறுகிறார். இது நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டிய ஒன்று என்று நான் நினைக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# சிறுபான்மை, பெரும்பான்மை என பிரித்தாளும் தி.மு.க.,வின் அரசியல் வானதி குற்றச்சாட்டு



'மக்களுடைய பிரச்சினையில் கவனம் செலுத்துவதை விட்டு விட்டு, மத்திய அரசுக்கு எதிராக ஏதாவது ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து மக்களை திசைதிருப்ப முயற்சிக்கிறார்கள்' என்று பா.ஜ., எம்.எல்.ஏ., வானதி குற்றம்சாட்டியுள்ளார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ., எம்.எல்.ஏ., வானதி கூறியதாவது நாடு முழுவதும் உள்ள முஸ்லீம் மக்கள், தங்களுடைய வக்பு சொத்துக்கள் முறையற்ற வகையில் நிர்வாகம் செய்யப்படுவதற்கும், உண்மையாக யார் அந்த பலனை பெற வேண்டுமோ, அவர்களுக்கு கிடைக்க வழிவகை செய்ய சீர்திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் இந்த சட்டத்திருத்த மேற்கொள்ளப்பட்டது.

சமூகநீதி பேசுகின்றன தி.மு.க., அரசு ஒன்றை மறந்திருக்கிறார்கள். புதிதாக கொண்டுவரக்கூடிய மத்திய அரசின் சட்டத்திருத்தத்தின்படி, வக்பு சொத்துக்களை நிர்வாகம் செய்வதில், முஸ்லிம் சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடஒதுக்கீடு உண்டு. அதேபோல, பெண்களுக்கு இடஒதுக்கீட்டை கொண்டு வருகிறது பா.ஜ., அரசு. இவற்றை எல்லாம் எதிர்த்து, பழைய முறையிலேயே இருக்க வேண்டும் என்பதற்காகவும், தி.மு.க., அரசு ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக கணக்குகளை போடுகின்றனர்.

மக்களுடைய பிரச்னையில் கவனம்செலுத்துவதை விட்டுவிட்டு, மத்திய அரசுக்கு எதிராக ஏதாவது ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து மக்களை திசைதிருப்ப முயற்சிக்கிறார்கள். முஸ்லிம், கிறிஸ்துவம் மற்றும் ஹிந்து மக்களுக்கும் அரசியலமைப்பு சமமான உரிமைகளை வழங்கியிருக்கிறது.

ஒரு மதத்தினரின் வழிபாடு செய்வதில் எந்த பிரச்னையும் கிடையாது. சட்டம் அதை முழுமையாக அனுமதிக்கிறது. மத்திய அரசு பாதுகாக்கிறது.

ஆனால், ஹிந்து மக்களுக்காக அவர்கள் நிர்வாகம் செய்யும் கோவில் களுக்கு ஒரு அமைச்சரை நியமனம் செய்து விட்டு, தற்போது மத சுதந்திரம் குறித்து முதல்வர் ஸ்டாலின் எங்களுக்கு பாடம் எடுத்து வருகிறார்.

இன்று தீர்மானத்தின் முன்பாக முதல்வர் பேசியதை கூர்ந்து கவனித்தால் தெரியும். இந்தியாவில் உள்ள வக்பு சொத்துக்களும் நேர்மையான வழியில் வெளிப்படையான முறையில் நிர்வாகம் செய்வதற்காக, நாடு முழுவதும் பார்லிமென்ட் கூட்டுக்குழு கருத்துக்களை கேட்டு, இந்த சட்டத்திருத்தத்தை கொண்டு வந்துள்ளது.

தி.மு.க.,வின் வழக்கமான, சிறுபான்மை, பெரும்பான்மை என்று பிரித்து பார்த்து அரசியல் செய்வதற்காக, தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது. இதனை பா.ஜ., எதிர்ப்பதாக சொல்லிவிட்டு வெளிநடப்பு செய்துள்ளோம், இவ்வாறு அவர் கூறினார்.

# பொம்மையும் வன்முறையும்!



உலகிலுள்ள எல்லாச் சமூகங்களையும்போல் மெக்ஸிகோவில் உள்ள அஸ்டெக் சமூகமும் ஒரு கட்டத்தில் பெரும் மாற்றத்தைச் சந்தித்தது. ஆண்களையும் பெண்களையும் ஒன்றுபோல் நடத்தும் அசட்டுத்தனத்தை இனியும் தொடரக் கூடாது, நாம் அடுத்த கட்ட வளர்ச்சியை அடையவேண்டும் என்று அவர்கள் முடிவுசெய்தார்கள். ஆண், பெண் இருவருமே நிலவுடைமையாளர்களாக இருக்கலாம் என்னும் விதி உடைக்கப்பட்டது. ஒரு பெண் தான் நினைத்த எந்தப் பணியிலும் ஈடுபடலாம் என்னும் தாராளவாதம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது. 1430 வாக்கில் அரசியல் மாற்றமொன்று நிகழ்ந்தது. பெண்களுக்கு இனி ஆட்சியதிகாரம் அளிக்கவேண்டியதில்லை என்றும் ஆண்களே அரசகுல வாரிசாக நியமிக்கப்படவேண்டும் என்றும் அஸ்டெக் மன்னர்கள் முடிவெடுத்தனர்.



> **புதிதாக ஓர் ஆண் குழந்தை பிறந்தால் அதை அள்ளியெடுத்து வந்து வெயிலில் காட்டுவார்கள். நான்கு முறை இவ்வாறு செய்யவேண்டும். பிறகு ஒரு கேடயத்தையும் நான்கு அம்புகளையும் கொண்டுவருவார்கள். இதோ பார், இதோ பார் என்று குழந்தையின் கவனத்தை இழுத்துப் பிடித்து இவற்றைக் காட்டுவார்கள். பிறகு அந்தக் குழந்தை கேட்கும்படி பின்வருமாறு சொல்வார்கள்.**

நிலம் மன்னருக்குச் சொந்தமானது என்று அறிவிக்கப்பட்டது. ஆண்கள் அதில் பணிபுரியலாம், ஆனால், உரிமை கொண்டாட முடியாது. பெண்களுக்கும் நிலத்துக்கு இனி எந்தவிதத் தொடர்பும் இல்லை. ஆண்களும் பெண்களும் மன்னருக்குக் கட்டுப்பட்டவர்கள். பெண்கள் மன்னருக்கும் ஆண்களுக்கும் கட்டுப்பட்டவர்கள். இதுவே புதிய சமூக விதியாக மாறியது. அடுத்ததாக எண்ணிக்கையில் மிகுந்திருந்த அஸ்டெக் கடவுள்களை ஒழுங்குபடுத்தி ஒரே கடவுள் முன்னிறுத்தப்பட்டார். ஒரு சமூகத்தை ஆள ஒரு மன்னர், ஒரு கடவுள், ஒரு விதி போதும் என்று கருதப்பட்டது. இந்தக் கட்டுப்பாடுகளால் உடனடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள். நிலம் இல்லை, வீடு இல்லை, சொத்து இல்லை. மிக முக்கியமான சுயமரியாதை இல்லை. இனி புதிய வழிகளைக் கண்டுபிடிக்கவேண்டும். புதிதாக வாழ்வைக் கட்டமைத்துக்கொள்ளவேண்டும்.

முதலில் செய்வதற்கு ஒரு தொழில் வேண்டும் என்பதை உணர்ந்துகொண்டு அங்கிருந்து ஆரம்பித்தார்கள். வயதான பெண்கள் திருமணத்துக்குத் துணை தேடுபவர்களாக மாறினார்கள். இன்னும் சிலர் கடவுளிடம் இருந்த அருள் பெற்று நோயைக் குணமாக்கத் தொடங்கினார்கள். இந்தக் கலை கைவராதவர்கள் பச்சிலை மருத்துவம் பார்த்தனர். துணி வேலைப்பாடுகள் செய்யத் தெரிந்தவர்கள் அதையே ஒரு தொழிலாக மாற்றிக்கொண்டனர். ஆடம்பரமான, வேலைப்பாடுமிக்க துணிமணிகளை உயர்குலப் பெண்கள் மட்டும்தான் உடுத்தமுடியும் என்றொரு விதியும் அப்போது இருந்தது. இந்தப் பணிகளையெல்லாம் பெண்கள் முன்னரே செய்துவந்திருக்கின்றனர். ஒரு தாய் தேவைப்படும் பொழுது மருத்துவராக மாறுவதும் வீட்டுத் தேவைக்குத் துணி தைப்பதும் இயல்பானதுதான். ஆனால், இப்போது இவையெல்லாம் பிரத்தியேக தொழில்களாக வளர்ச்சிபெற்றன. என்னிடமிருந்து நிலத்தைத்தான் பறிக்கமுடியும், திறன்களைப் பறிக்க முடியாது என்பதை உணர்த்தவே இத்தொழில்களை அவர்கள் கையில் எடுத்துக்கொண்டார்கள். அதுநாள் வரை பொழுதுபோக்காகக் கருதப்பட்ட பணிகள் இப்போது வருமானமீட்டும் தொழில்களாக மாறிப்போயின.

பெண்களின் இந்தத் திடீர் வளர்ச்சியை ஆண்கள் தமக்கே உரித்தான முறையில் எதிர்கொண்டனர். மதச் சடங்குகளில் பங்கேற்பதில் இருந்து அவர்கள் விலக்கிவைக்கப்பட்டனர். கடவுளுக்கு அருகில் செல்லக் கூடாது, கடவுளுக்குத் தொண்டு செய்யக் கூடாது, பூசாரிகளாக ஆகக் கூடாது உள்ளிட்ட கட்டுப்பாடுகள் வழக்கத்துக்கு வந்தன. இந்தப் பிறவியில் மட்டுமல்ல, அவர்கள் இறந்து மறுபிறவி எடுத்தாலும் கடவுளை நெருங்கக்கூடாது என்று எச்சரித்தது இன்னொரு விதி. வதை தொடங்கி மரணம் வரை பலவித தண்டனைகள் வழக்கத்தில் இருந்ததால் சமூக நியதி குலையாமல் ஆண்களும் பெண்களும் நடந்துகொண்டனர்.

ஆணாதிக்கச் சமுதாயம் ஒன்றை மெல்ல மெல்ல கட்டமைக்கத் தொடங்கியது அஸ்டெக் நாகரிகம். சொத்துரிமை ஆண்களுக்கு மட்டுமே, எக்காரணத்தை முன்னிட்டும் பெண்களின் கரங்களுக்குச் சென்றுவிடக் கூடாது என்று ஆண்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆணைப் போல் தனக்கும் சொத்து வேண்டும் என்று கருதும் பெண்ணுக்கு இரண்டு வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. செல்வந்தர் ஒருவரை மணந்துகொள்வது அல்லது அவருடைய வீட்டில் காதலியாகத் தங்கிவிடுவது. புதிய தொழில் முயற்சிகள்மூலம் தங்களை உருமாற்றிக்கொள்ள முடியாத பெண்களுக்கும் இதே பணி சிபாரிசு செய்யப்பட்டது. குறிப்பாக, கணவனை இழந்த பெண்களுக்கு ஒரே ஒரு வேலைதான் அனுமதிக்கப்பட்டிருந் தது, பாலியல் தொழில். ஒரு சமூக ஏற்பாடாகவே இது நிலவியதால் பெண்கள் இதனைக் கேள்விக்கு உட்படுத்தவில்லை. இந்த நெறிமுறைகளை அஸ்டெக் சமுதாயம் தங்களுடைய அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டுசேர்த்தது. குழந்தைகளாக இருக்கும்போதே இந்தச் சட்டத்திட்டங்கள் தெளிவாகப் போதிக்கப்பட்டன. ஆண்களுக்கு மீன் பிடிக்கக் கற்றுக்கொடுத்தார்கள். காடுகளைத் திருத்தியமைக்கவும் வேட்டையாடவும் விவசாயம் செய்யவும் கற்றுக்கொடுத்தார்கள். உடற்பயிற்சி செய்யவேண்டும், உடலைக் கட்டுறுதியாக வைத்திருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டார்கள். இரும்பை எப்படி வளைப்பது, எப்படிக் கருவிகள் செய்வது போன்றவை கற்றுக்கொடுக்கப்பட்டன. பெண்களுக்கு வீட்டு வேலைகளின் நுணுக்கங்கள் கற்றுக்கொடுக்கப்பட்டன. சமையல் கலை விரிவாகக் கற்றுக்கொடுக்கப்பட்டது. துணி தைப்பது எப்படி என்றும் குழந்தைகளைக் கவனித்துக்கொள்வது எப்படி என்பதும் கற்றுக்கொடுக்கப்பட்டன. ஆண்களுக்கு ஆண்களும் பெண்களுக்குப் பெண்களும் வகுப்பெடுத்தனர்.

புதிதாக ஓர் ஆண் குழந்தை பிறந்தால் அதை அள்ளியெடுத்து வந்து வெயிலில் காட்டுவார்கள். நான்கு முறை இவ்வாறு செய்யவேண்டும். பிறகு ஒரு கேடயத்தையும் நான்கு அம்புகளையும் கொண்டுவருவார்கள். இதோ பார், இதோ பார் என்று குழந்தையின் கவனத்தை இழுத்துப் பிடித்து இவற்றைக் காட்டுவார்கள். பிறகு அந்தக் குழந்தை கேட்கும்படி பின்வருமாறு சொல்வார்கள். 'நீ ஒரு பறவை. நீ தங்கியிருக்கும் வீடு என்பது உண்மையில் ஒரு கூடு. நீ உலகைக் காணவேண்டும். உலகின் ஒளியைத் தரிசிக்கவேண்டும். உன் எதிரிகளைக் கொன்று அவர்கள் ரத்தத்தைக் கொண்டு கதிரவனுக்கு நீ மகிழ்ச்சியூட்ட வேண் டும். அதற்காகத்தான் நீ பிறப்பெடுத்திருக்கிறாய்.' பிறந்த பெண் குழந்தைக்கு வீரத்தை உணர்த்தும் எந்தவொரு பொருளையும் காட்டக் கூடாது. சூரியனைக் காட்டும் சடங்கும் கூடாது. மரச் சாமான், விளையாட்டுப் பொருள் எதையாவது கொண்டுவந்து காட்டலாம். பிறகு குழந்தையின் காதில் நுழையுமாறு பின்வரும் வார்த்தைகளைச் சொல்லவேண்டும். 'உடலிலுள்ள இதயம்போல் நீ இருக்கவேண்டும். நீ வீட்டைவிட்டு வெளியில் போகவே கூடாது.'

அடித்தட்டுப் பெண்களுக்கு இப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் என்றால் அஸ்டெக் இளவரசிகளுக்கு வேறு மாதிரியான நிலை. பட்டாடை, ஆபரணம், தங்கம் போல் இளவரசியும் ஒரு விலையுயர்ந்த பொருள்தான். அந்தப் பொருளை எதுநாள் வரை அரண்மனையிலேயே பாதுகாக்க வேண்டும், எப்போது கைமாற்றியளிக்கவேண்டும் என்பதை மன்னர் முடிவுசெய்வார். யாருக்கு என்பதையும்தான். பெரும்பாலும் அரசியல் காரணங்களுக்காகவே அரண்மனை பெண்கள் பயன்படுத்தப்பட்டுவந்தனர். வெல்ல முடியாத ஓர் எதிரியை மடக்கவேண்டுமானால், இந்தா எடுத்துக்கொள் என்று பெண்ணை எதிரி வீட்டு இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுத்து அனுப்பிவைப்பது பிரபலமான ஒரு வழக்கமாக இருந்தது. இதை இளவரசி மறுக்க முடியாது. இளவரசனும்தான் என்றாலும் அவனைப் பொருத்தவரை திருமணம் என்பது நீண்டு தொடரும் ஒரு சடங்கு. ஒரு பெண்ணோடு முடித்துக்கொண்டுவிடவேண்டிய அவசியமில்லை. எப்படிப் பார்த்தாலும் ஆண் வேறு, பெண் வேறு. ஆணின் இயல்புகளும் பெண்ணின் இயல்புகளும் வெவ்வேறாக இருக்கவேண்டும். அதைவிடமுக்கியம் இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருக்கவேண்டும். வீரம் ஆணுக்கு அழகு என்றால், வீரமாக இல்லாமல் இருப்பது பெண்ணுக்கு அழகு. கூட்டில் தங்கியிருக்கக் கூடாது என்பது ஆணுக்கான விதி என்றால் கூட்டில் அடைபட்டிருக்கவேண்டும் என்பது பெண்ணுக்கான விதி. ஒழுக்கம் என்பது பெண்ணுக்கான இயல்பு என்னும் ஒரே காரணத்துக்காக ஒழுக்கத்தை ஆண்மீது திணிக்காமல் தள்ளிவைத்திருந்தார்கள். இந்த முரண்பாடு தொடரும்வரை ஒரு சமூகம் சீராகச் செயற்படும் என்று அஸ்டெக் நம்பினார்கள். எனவே கேடயத்தை விரும்பும் பெண் குழந்தையையும் பொம்மையை நேசிக்கும் மகனையும் கண்டு அவர்கள் துணுக்குற்றார்கள். இந்தத் தவறு விபரீதமானது அல்லவா?

பெண்களிடமிருந்து ஆண்களைப் பிரித்தெடுத்துக் காட்டும் முக்கிய விஷயம் வன்முறை என்பது அஸ்டெக் சமூகத்தின் நம்பிக்கை. உணவைவிட வன்முறையை ஊட்டி வளர்ப்பதன்மூலம்தான் ஓர் ஆண் குழந்தையை நிஜ வீரனாக மாற்றமுடியும் என்று அவர்கள் நம்பினர். பிறந்தவுடன் ஆயுதத்தைக் காண்பிப்பதில் இருந்து தொடங்குகிறது பயிற்சி. குழந்தை வளர வளர வெறுப்பும் சினமும் அவனுக்குள் மூட்டி வளர்க்கப்படுகின்றன. ஆயுதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. உன்னைத் தற்காத்துக்கொள்வது எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்கு முக்கியம் எதிரியை ரத்தம் சிந்த வைப்பதும் என்னும் நீதிநெறி அவனுக்குப் புகட்டப்படுகிறது. எதைக் கண்டும் அஞ்சாதே! எதையும் அழிக்கத் தயங்காதே! இரக்கம் என்பது உனக்கான குணம் அல்ல.

எப்படி ஆதிக்கம் செலுத்துவது, எப்படிக் கொல்வது என்பதை வார்த்தைகளால் மட்டும் கற்றுக்கொடுத்தால் போதாது என்பதால் செயலளவிலான பாடங்களும் அளிக்கப்பட்டன. இளவரசர்களும் செல்வந்தர் வீட்டு மகன்களும் இந்தப் பயிற்சியை எடுத்துக்கொண்டனர். முதலில் பழங்குடி இன மக்களின் தலைவர்களிடம் அல்லது அரசர்களிடம் சென்று பேசுவார்கள். என் மகனுக்குப் போர் பயிற்சி அளிக்கப் போகிறேன், அவனுடன் போரிட நீ வரமுடியுமா என்று கேட்பார்கள். அந்த மன்னர்களும் இதற்கு ஒப்புக்கொள்வார்கள். குறிப்பிட்ட தினத்தன்று போட்டி நடைபெறும். பயிற்சி பெறும் ஆண் மைதானத்தில் இறக்கிவிடப்படுவான். எதிரில் பழங்குடி மன்னன். இரு மன்னர்களுக்கு இடையிலான போர் என்று அறிவிக்கப்படும். மோதல் தொடங்கும்.

பழங்குடி மன்னன் வாள், அம்பு என்று தன்னிடமுள்ள ஆயுதங்களைக் கொண்டு சிறுவன் மன்னனிடம் மோதுவார். அவனுக்குக் கோபமூட்டுவார். அவனது பகையுணர்ச்சியை அதிகரிக்கும் வண்ணம் சீண்டுவார். சிறுவன் மன்னன் கோபம் கொண்டு தன்னிடமுள்ள ஆயுதங்களால் பழங்குடி மன்னனை வெறியுடன் தாக்கத் தொடங்குவான். உள்ளுக்குள் வெறுப்பு பெருந்தீயாக வளர்ந்து செழிக்கும். கத்தியால், ஈட்டியால் குத்தி பழங்குடி மன்னனை அவன் காயப்படுத்துவான். எதிரியைத் தாக்கு, பிறகு ரத்தம் சிந்த வை, இறுதியில் சிறுகச் சிறுகக் கொல் என்னும் பாடத்தைச் செயலில் நிரூபிப்பதற்கான தருணம் அது. பலத்த கரவொலிகளுக்கு மத்தியில் சிறுவன் மன்னன் அதை வெற்றிகரமாகச் செய்துமுடிப்பான். அவனுடைய வாழ்க்கை அன்றிலிருந்து தொடங்குகிறது. இனி அவன் எதிரியைக் கண்டு அஞ்ச மாட்டான். ரத்தத்தைக் கண்டு அருவருப்படைய மாட்டான். கொல்வதில் சிக்கல் ஏதும் இராது. சில நேரம் பழங்குடி மன்னன் படையுடன் திரண்டுவருவான். சிறுவன் மன்னனும் படையுடன் மோதுவான். சில நேரம் பழங்குடி மன்னன் சிறுவனால் கைது செய்யப்படுவான். பிறகு ஊர் கூடி நிற்க தன் கைதியைச் சிறுவன் நரபலி கொடுப்பதும் உண்டு. போரில் கொல்வதா நரபலி கொடுப்பதா என்பதில் மட்டும்தான் வேறுபாடு இருக்கும். வன்முறையில் மாற்றம் எதுவும் இருக்காது. கைதிகளையும் எதிரிகளையும

(7ஆம் பக்கம் பார்க்க...)


# ‘பெண்டானில்’ ரசாயனம் கடத்தல்: இந்தியா மீது பழிபோடும் அமெரிக்கா

அமெரிக்காவில் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள போதைப் பொருள் தயாரிப்புக்கான, ‘பெண்டானில்’ ரசாயன கடத்தலில் சீனாவும், இந்தியாவும் முன்னிலையில் இருப்பதாக, அமெரிக்க உளவு அமைப்பின் அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பெண்டானில் எனப்படும் ரசாயனக் கலவை, வலி நிவாரணியாக வழங்க அமெரிக்காவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது செயற்கை போதையை உருவாக்கக் கூடியது. கடினமான அறுவை சிகிச்சைகள் போன்றவற்றில், மயக்க மருந்தாகவும், வலி நிவாரணியாகவும் இதைப் பயன்படுத்த அமெரிக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

அதே நேரத்தில், சற்று அளவு கூடினால், போதைப் பொருளாக மாறி, அதற்கு மக்கள் அடிமையாகிவிடுவர். போதைப் பொருள்கள் தயாரிக்கும் குழுக்கள், இதை ஒரு போதைப் பொருளாக மாற்றியுள்ளன. இது பொடி அல்லது மாத்திரையாக விற்கப்படுகிறது.

பெண்டானில் தயாரிப்பதற்கான ரசாயனங்கள், அமெரிக்க போதைப் பொருள் கடத்தல் கும்பல்களால், சீனாவில் இருந்தே அதிக அளவில் வாங்கப்படுவதாக குற்றச்சாட்டு உள்ளது. அமெரிக்காவில், கடந்தாண்டு




அக்டோபர் வரையிலான, 12 மாதங்களில், பெண்டானில் போதைப் பொருளை அதிகளவில் எடுத்துக் கொண்டதால், 52,000 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, இந்த போதைப் பொருளை ஒழிப்பதற்கான முயற்சிகளில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ஈடுபட்டுள்ளார். இந்த ரசாயனப் பொருளை தயாரிக்கும் சீனா மீது கூடுதல் வரியை விதிப்பதாக அவர் அறிவித்தார். மேலும், இந்தப் போதைப் பொருள் கடத்தலை தடுக்க தவறியதாக, அண்டை நாடுகளான, கனடா மற்றும் மெக்சிகோ மீதும் கூடுதல் வரியை அறிவித்துள்ளார்.

இந்நிலையில், துளசி கப்பார்ட் தலைவராக உள்ள அமெரிக்க தேசிய உளவுப் பிரிவு, ஆண்டு அச்சுறுத்தல்கள் கணிப்பு என்ற பெயரில் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்துள்ளது. இதில், அமெரிக்காவுக்கு உள்ள அச்சுறுத்தல்கள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில், பெண்டானில் தயாரிப்புக்கான ரசாயனங்கள் சீனா மற்றும் இந்தியாவில் இருந்தே அதிகளவில் தயாரிக்கப்பட்டு, சட்டவிரோதமாக போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கு வினியோகிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. முதல் முறையாக இந்தியா மீது இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதற்கு முன், இந்தியாவைச் சேர்ந்த சில போதைப் பொருள் கடத்தல் கும்பல்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால், ஒட்டுமொத்தமாக, நாட்டின் மீதே முதல் முறையாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இந்தியா அதிக வரி விதிப்பதாகவும், அதற்கு பதிலடியாக அதே அளவு வரி விதிக்கப் போவதாகவும் டிரம்ப் கூறி வருகிறார். இந்நிலையில், இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. அதனால், இந்தியா மீது கூடுதல் வரி விதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.



# அமெரிக்க ராணுவ வீரர்கள் 4 பேர் மாயம்: லித்துவேனியாவில் தீவிர தேடுதல் வேட்டை

லித்துவேனியாவில் மாயமான அமெரிக்க ராணுவ வீரர்கள் 4 பேரை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. ஐரோப்பாவின் பால்டிக் பிராந்திய நாடுகளில் ஒன்று லித்துவேனியா. சோவியத் யூனியனில் இருந்து பிரிந்த நாடுகளில் இதுவும் ஒன்று. இந்த நாட்டுக்கும், ரஷ்யாவுக்கும் நீண்ட காலமாக பகை இருக்கிறது. ரஷ்யா, உக்ரைனுக்கு சொந்தமான கிரீமியா தீபகற்பத்தை ஆக்கிரமித்த போது, தங்கள் நாட்டுக்கும் அச்சுறுத்தல் ஏற்படலாம் என லித்துவேனியா கருதியது.

அதன் தொடர்ச்சியாக, அந்த நாட்டில் அமெரிக்க ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், லித்திவேனியாவின் பப்ரேட் நகருக்கு அருகில் பயிற்சியில் ஈடுபட்டு இருந்த அமெரிக்க ராணுவ வீரர்கள் 4 பேர் மாயம் ஆகினர். அவர்கள் வாகனம் மட்டும் நீரில் மூழ்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது.

இந்த பணியை அமெரிக்கா ராணுவம் மற்றும் லித்துவேனியா ஆயுதப்படைகள் ஆகிய இணைந்து மேற்கொண்டு வருகிறது.

அமெரிக்க வீரர்கள் காணாமல் போன பகுதி, பெலாரஸ் நாட்டின் எல்லைக்கு அருகே அமைந்துள்ள பகுதியாகும். இதனால் அமெரிக்க வீரர்கள் வெள்ளத்தில் மூழ்கினார்களா, அல்லது தாக்குதலுக்கு ஆளானார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதற்கிடையே, காணாமல் போன ராணுவ வீரர்கள் குறித்து தகவல் தெரியுமா? என நிருபர்கள் எழுப்பி கேள்விக்கு, ‘இல்லை. எனக்கு தகவல் தெரியாது’ என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்தார்.

இது குறித்து லித்துவேனியாவின் பாதுகாப்பு துறை அமைச்சர் டோவிலே சகாலியேனே கூறியதாவது: காணாமல் போன ராணுவ வீரர்கள் பற்றி கேள்விப்பட்டு மிகவும் வருந்தமடைந்தேன். அனைவரும் தயார் நிலையில் உள்ளனர். ராணுவ வீரர்களை தேடும் பணி நடக்கிறது. மீட்கப்பட்டதும் அவசர மருத்துவ உதவிகள் வழங்க அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# அறக்கட்டளை பொறுப்பில் இருந்து விலகினார் இளவரசர் ஹாரி

தாயார் டயானாவை கவுரவிக்கும் விதமாக, எச்.ஐ.வி., நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக தொடங்கப்பட்ட அறக்கட்டளையின் பொறுப்பில் இருந்து இளவரசர் ஹாரி விலகியது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டன் இளவரசர் ஹாரி, அமெரிக்க நடிகை மேகன் மார்க்கலை 2018ல் திருமணம் செய்து கொண்டார். வெள்ளையர் அல்லாத பெண்ணை திருமணம் செய்து கொண்டதால், மேகனுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. தொடர்ந்து எதிர்ப்புகள் கிளம்பியதால், அரச குடும்பத்தில் இருந்து விலகினார்.

தற்போது, தன்னுடைய தாயாரும், இளவரசியுமான டயானாவை கவுரவிக்கும் விதமாக, தொடங்கப்பட்ட அறக்கட்டளையின் இணை நிறுவனர் பொறுப்பில் இருந்தும் அவர் விலகியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 2006ம் ஆண்டு சென்டேபல் என்ற பெயரில் தொடங்கப்பட்ட இந்த அறக்கட்டளையின் மூலம், எச்.ஐ.வி., நோயால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள், பெண்களுக்கு உதவி செய்து வந்தார்.

அறக்கட்டளையின் தலைமை பொறுப்பில் இருந்து ஜிம்பாப்வேவைச் சேர்ந்த ஷோபி சந்தவுகா பதவி விலக மறுத்ததால் எழுந்த பிரச்னை காரணமாக, இணை நிறுவனரான லெசோதோ இளவரசர் சீசோவுடன் இணைந்து ஹாரியும் அறக்கட்டளை பொறுப்பில் இருந்து விலகியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

20 ஆண்டுகளுக்கு மேலாக இளவரசர் ஹாரி இந்த அறக்கட்டளையின் மூலம் எச்.ஐ.வி., நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்து வந்துள்ளார்.



# வெளிநாட்டு தயாரிப்பு கார்களுக்கு 25% வரி: அறிவித்தார் அதிபர் டிரம்ப்!

வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் கார்களுக்கு 25% வரிகள் விதித்து அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் பதவி ஏற்ற முதல் நாளிலிருந்து பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். இதற்கிடையே, அவர் இறக்குமதி வரிகளை அதிகரித்து அண்டை நாடுகளுக்கு அதிர்ச்சி கொடுத்து வருகிறார். தற்போது அவர் வெளிநாட்டு கார்களுக்கு அதிக வரி விதித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக, ஓவல் அலுவலகத்தில் நிருபர்கள் சந்திப்பில் டிரம்ப் கூறியதாவது: வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் கார்களுக்கு, ஏப்ரல் 2ம் திகதி முதல் 25மூ வரிகள் விதிக்கப்படும். ஏப்ரல் 3ம் தேதி முதல் வரி வசூல் துவங்கும். இந்த புதிய வரி விதிப்பு நிரந்தரமாக இருக்கப் போகிறது.

அமெரிக்க பொருளாதாரத்தையும் தொழில்துறையையும் மேம்படுத்துவதே புதிய வரி விதிப்பின் நோக்கமாகும். இந்த நடவடிக்கை பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும். இது நீங்கள் இதற்கு முன்பு பார்த்திராத வளர்ச்சியைத் உருவாக்கும்.

வாகன கட்டணக் கொள்கையை வடிவமைப்பதில், டி.ஓ.ஜி.இ., குழு தலைவர் எலான் மஸ்கிற்குஎந்த தொடர்பும் இல்லை. வாகனங்களுக்கு இறக்குமதி வரியை அதிகரிப்பது குறித்து எலான் மஸ்க் ஆலோசனை வழங்கவில்லை. புதிய வாகனத் துறை வரிகள் மிக விரைவில் வரும். இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறினார்.

# வவுனியாவில் தமிழரசின் வேட்பாளர் அறிமுகம்












வுனியா, மார்ச் 27

வவுனியாவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு இன்று நடைபெற்றது.

வவுனியா நகரில் அமைந்துள்ள வாடி வீட்டில் கட்சியின் வவுனியா மாவட்டத்தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சத்தியலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, செட்டிகுளம் பிரதேச சபை என்பவற்றுக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இதில் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், வேட்பாளர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மன்னாரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நபர் தொடர்பாக தகவல் எதுவும் தெரிந்தவர்கள் 0743022280, 0758320499 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத் தருமாறு குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகை மடக்கிப் பிடித்த கடற்படையினர், அதிலிருந்த 11 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

கைதான மீனவர்கள் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்கள் கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## வடமராட்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராணுவப் புலனாய்வுக்குப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது பொலிகண்டி பகுதியில் பழைய வீடொன்றுக்குள் மறைத்து வைக்கப்படிருந்த நிலையில் குறித்த கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் எவரும் கைது செய்யப்படவில்லை.

75 கிலோகிராமுக்கும் அதிகமான இந்தக் கஞ்சா வல்வெட்டித்துறை பொலிஸாரிடம்கையளிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சாமர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்றுக்கொண்ட ஒரு மில்லியன் ரூபா பணத்தை முதலமைச்சராக வங்கிக்கிளையிலிருந்து நேரடியாக அவர் பெற்றுக்கொண்டமை இரண்டாவது குற்றச்சாட்டாகும்.

மற்றுமொரு அரச வங்கியிடமிருந்து பணத்தைக் கோரிய போதிலும் அதனை முகாமையாளர் நிராகரித்ததன் பின்னர் மாகாண சபை நடத்திச் சென்ற அனைத்து நிலையான வைப்புகளையும் அந்த வங்கியிலிருந்து மீளப் பெற்றுக்கொண்டமையால் 23 மில்லியன் ரூபா அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியமை மூன்றாவது குற்றச்சாட்டாகும்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக சாமர சம்பத் தசநாயக்க இன்று காலை 9.30 மணிக்கு இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்குச் சென்றிருந்த நிலையில் அங்கு கைது செய்யப்பட்டார்.

அவர் இன்று பிற்பகல் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டார்.

50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார்.

வெளிநாட்டுக்குச் செல்ல அவருக்குத் தடை விதிக்கப்பட்டதுடன் அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டார்.

## நாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கும்போது அரசாங்கமும் ஆளுந்தரப்பு பிரதிநிதிகளும் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

மின்சக்தி அமைச்சரின் வீட்டின் அருகே உள்ள பல கிராமங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இன்று இவ்வாறானதொரு நாடே காணப்படுகின்றது.

நாட்டை ஆள்வதற்கான திட்டமில்லாத அரசாங்கமே ஆட்சியில் இருக்கின்றது. இதன் காரணமாக நாட்டின் திருப்புமுனையை தீர்மானிக்கும் விதமாக இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் தயாராக வேண்டும்." - என்றார்.

# அளவுக்கு அதிகமான மாத்திரைகளை உட்கொண்ட பெண் ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, மார்ச் 27

அளவுக்கு அதிகமான மாத்திரைகளை உட்கொண்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு, சேற்றுக்குடா பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே தனது நேய்க்கான மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக உட்கொண்டதால் மரணமடைந்துள்ளார்.

வழமை போன்று நேற்று புதன்கிழமை இரவு உணவு உட்கொண்டு விட்டு நோய்கான மாத்திரைகளையும் உட்கொண்டு மேற்படி பெண் உறங்கச் சென்றுள்ளார். இன்று வியாழக்கிழமை அதிகாலை தனது மனைவிக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதை அவதானித்த கணவர், மனைவியை உடனே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்.

அந்தப் பெண்ணுக்கு அங்கு சிகிச்சையளிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு பொலிஸாரின் வேண்டுகோளுக்கு அமைய, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்துக்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டு, சடலத்தைப் பிரேத பரிசோதனைக்குப் பணித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொம்மையும் வன்முறையும்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கொல்வது கடவுளைத் திருப்திபடுத்தும் செயல் என்று அவர்களுக்குப் போதிக்கப்பட்டிருந்தது. வன்முறையே அவனை வாழவைக்கும். வன்முறையே அவனுக்குப் புண்ணியத்தைத் தேடித்தரும். வன்முறையே அவனை ஓர் ஆண் என்று அறிவிக்கும். சரி, ஒருவேளை பழங்குடி மன்னன் சிறுவன் மன்னனைக் கொன்றுவிட்டால் என்னாகும்? அப்படி நடப்பதற்கு வாய்ப்பே இல்லை. சிறுவனுக்கு அந்த அளவுக்குத் தீவிரமாகப் பயிற்சிகள் அளிக்கப்படும் என்பதல்ல காரணம். சிறுவன் தோற்பதற்கான வாய்ப்பு அங்கே ஒருபோதும் எழாது என்பதே முக்கியம். காரணம் இது ஓர் ஏற்பாடு. மன்னர்களும் செல்வந்தர்களும் பழங்குடியிடம் பேசும்போதே இதையும் சொல்லிவிடுவார்கள். நீ என் மகனுடன் மோதவேண்டுமே தவிர, அவனை ஒருபோதும் கொல்லக் கூடாது. போரிடுமாறு நீ நடிக்கவேண்டும். உன்னைக் கொன்றாலும்நீ அமைதியாகவே இருக்கவேண்டும்.

ஆண் வீரம் என்பது மேல்தோற்றத்துக்குப் பளபளப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டாலும் உள்ளுக்குள் அது செயற்கையாக வளர்த்தெடுக்கப்பட்ட ஓர் ஏற்பாடுதான் என்பதை விளக்க இதைவிட வெளிப்படையான ஓர் உதாரணம் வரலாற்றில் இருக்க முடியாது. நான் ஒரு வீரன், நான் வன்முறையை விரும்புபவன், இதுவே என் இயற்கையான இயல்பு என்று அந்தச் சிறுவன் மன்னன் தந்திரமாக நம்ப வைக்கப்படுகிறான். இது ஓர் ஏற்பாடு என்பது அவனுக்கு நீண்ட காலம் தெரியாமல்தான் இருக்கிறது. ஒரு கட்டத்தில் அவன் வளர்ந்து சிந்திக்கத் தொடங்கும்போது இந்த உண்மையை அவன் தெரிந்துகொண்டிருக்கத்தான் வேண்டும். அப்போது அவன் அதிர்ச்சியடைந்தானா? வெறுப்பு கொண்டானா? இது ஒரு மாயை என்பதை உணர்ந்துகொண்டானா? இந்தப் பொய்யில் இருந்து விடுபடவேண்டும் என்று துடித்தானா?

அதற்கு வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது. காரணம், அந்தப் பொய் அதற்குள் கெட்டிப்பட்டுப் போய்விடுகிறது. அவனுடைய ஒரு பகுதியாகவே அது மாறிவிடுகிறது. ஆண்மை, வீரம் ஆகிய உயர்ந்த பண்புகளோடு அது ஒன்றுகலந்துவிடுகிறது. இனி அதை அவனிடமிருந்து பிரிக்க முடியாது என்பதால் அவன் சமரசம் செய்துகொள்கிறான். நீ இனி பொய் இல்லை, நீயே உண்மை என்று அந்தப் பொய்யை நோக்கி அவன் அறிவிக்கிறான். ஒரு தலைகீழ் மாற்றம் அங்கே ஏற்பட்டுவிடுகிறது. பொய் களத்தில்தான் அவன் வீரம் முளைவிடுகிறது என்றாலும் அதற்குப் பிறகு அவன் நிஜமாகவே தன் எதிரிகளைக் கண்டுபிடித்து கொல்லத் தொடங்குகிறான். முதலில் அவன் ஈட்டி வெளிக்கொண்டுவந்த ரத்தம் செயற்கையானதுதான் என்றாலும் நாளடைவில் அவன் நிஜ ரத்தத்தைக் கண்டுகொண்டுவிடுகிறான். இப்போது அவன் மெய்யாகவே வன்முறையை விரும்புகிறான். போரை ஏற்றுக்கொள்கிறான். வீரத்தைக் கொண்டாடுகிறான். வளர்ந்து பெரியவனானதும் தன் சிறுவன் மன்னனை அவன் போர்க்களத்துக்கு அனுப்பிவைக்கிறான். அதற்கு முன்பு பழங்குடி மன்னனிடம் சென்று பேசி ஓர் ஏற்பாட்டைச் செய்துமுடிக்கிறான். ஒரு மாய சுழற்சி தொடங்குகிறது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.03.2025இல் வெளியிடப்பெற்றது.